DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024
Prosecution Witness - P.W. 2

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜெகன் ஜேம்ஸ் |
| Father's Name | : | T. James |
| Village | : | Malayadi |
| Taluk | : | Vilavancode |
| Calling | : | Site Engineer |
| Age | : | 30 |
| Date | : | 16.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

16.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பரக்குன்று கடையாறவிளையில் வசித்து வருகிறேன். என்ன தொழில் செய்கிறேன் என்றால் திருவனந்தபுரம் உள்ள ஒரு கம்பெனியில் சைட் இன்ஜினியராக பணிபுரிகிறேன். அ.சா. 1 ஜெயராணி எனது அம்மா. ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்தவர் என்னுடைய அப்பா ஜேம்ஸ். எனது அப்பா மார்த்தாண்டம் சந்தையில் ஒரு காண்டிராக்டரிடம் துப்புரவு தொழிலாளியாக

பணிபுரிந்தார். எனது தம்பி ைஹதராபத்தில் ஒரு கம்பெனியில் Safety Department ல் வேலை செய்கிறார். சம்பவ சமயத்தில் எனது அப்பா சம்பவத்திற்கு 1 ½ மாதத்திற்கு முன்னர் காய்ச்சல் வந்து காலில் புண் ஏற்பட்டு, மார்த்தாண்டம் PPK ஆஸ்பத்திரியில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். காய்ச்சல் வந்து ஒரு 5 நாட்கள் தாண்டி காலில் ஆப்ரேசன் செய்யப்பட்டது. ஆப்ரேசனுக்கு பிறகு வீட்டில் அவர் பெட் ரெஸ்ட்டில் இருந்தார். 26.11.2023 அன்று காலை 8.30 மணியளவில் ஆஜர் எதிரி அருள் சுரேஷ் எனது வீட்டிற்கு வந்தார். அப்போது ரூபாய் 2,00,000/- கடன் கேட்டார். அப்பா நாளையிலிருந்து வீடு வேலை ஆரம்பிக்க போகிறோம் என்றும், அந்த தொகைதான் உள்ளது என்றும் சொன்னார். அந்த சமயத்தில் வீட்டில் நான், எனது அம்மா, மனைவி மற்றும் எனது 1 ½ வயது குழந்தை ஆகியோர் இருந்தோம். நாங்கள் அந்த வீடு பழைய வீடு, அந்த வீடு கட்டி 20 வருடம் இருக்கும். முன்புறம் ஆஸ்பெஸ்டாஸ் போட்டிருக்கும். பின்புறம் காங்கிரிட். அப்பா பணம் தரவில்லை என்றவுடன் கோபப்பட்டுவிட்டு திரும்பி போய்விட்டார். பொதுவாக நாங்கள் பரக்குன்று, ஏசுவின் திருஇருதய ஆலயத்திற்கு ஆராதனைக்கு செல்வோம். எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 6.30 மணிக்குதான் திருப்பலி. அந்த ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து அரசர் பெருநாள் என்பதால் காலை 9.30 க்குதான் திருப்பலி. நான் எனது மனைவி, குழந்தை மற்றும் எனது அம்மா ஆகியோர் காலை 9.30 மணிக்கு சர்ச்சிற்கு போனோம். அப்பா உடல்நலம் சரியில்லாததால் வீட்டில் இருந்தார். அப்போது வேறு யாரும் அவருடன் இல்லை. நான் கோவிலுக்கு முன்னர் பிள்ளையை வைத்து உட்கார்ந்து கொண்டிருந்தேன். சுமார் 10.45 மணியளவில் நான்

வெளியே உட்கார்ந்திருந்தபோது அம்மா கோவிலிருந்து வெளியே வந்தார். என்ன ஆச்சு என்று கேட்டேன். சுகர் மாத்திரை போடவில்லை தலைசுற்றுகிறது. வீட்டிற்கு போய் சுகர் மாத்திரை போட வேண்டும் என சொன்னார். எனது கையில் தூங்கி கொண்டிருந்த குழந்தையை சர்ச்சிற்குள் சென்று மனைவியிடம் கொடுத்தேன். நானும், எனது அம்மாவும் வீட்டிற்கு நடந்து வந்தோம். அது சுமார் 100 அல்லது 150 அடி தொலைவு இருக்கும். வீட்டிற்கு அருகே வரும்போது காம்பவுண்ட் கேட் திறந்திருந்தது. உள்ளே வீட்டின் கதவும் சிறிது திறந்திருந்தது. உள்ளிருந்து செத்து போ, செத்து போ என சத்தம் கேட்டது. நான் கதவை திறந்து என்னவென்று பார்க்கும்போது ஆஜர் எதிரி எனது அப்பாவை ஆணி பிடுங்கும் சுத்தியல் ஒன்றால் தலையில் மாறி மாறி அடித்துக் கொண்டிருந்தான். கதவை திறந்து பார்க்கும்போது நானும், அம்மாவும் சேர்ந்துதான் வந்தோம். எங்களை பார்த்தவுடன் எதிரி சுத்தியலை கீழே வீசி விட்டு, பின்வாசல் வழியாக ஓடிவிட்டான். அப்போது அவன் முதுகின் பின்புறத்தில் பேண்டிற்குள் ஒரு கண்ணாடி கவருக்குள் சிறிது பணம், எனது அப்பா அணிந்திருந்த நகைகள் மற்றும் ஒரு நைலான் கயிறு ஆகியவற்றை வைத்திருந்தான். அவன் வலது கையில் கையுறை அணிந்திருந்தான். எனது அப்பா ஒரு குருசு போட்ட செயின், மற்றும் 3 மோதிரங்கள் ஆகியவை அணிந்திருந்தார், அனைத்தும் தங்கத்தால் ஆனது. பின்னால் ஓடிய எதிரி வீட்டை விட்டு வெளியே போய் அங்கிருந்த சிறிய சந்து வழியாக மேற்கு பக்கமாக ஓடினான். எங்கள் வீடு வடக்கு பார்த்து உள்ளது. பின்பக்க வாசல் தெற்கு பார்த்து உள்ளது. அவ்வாறு மேற்கு பக்கமாக ஓடி வீட்டிற்கு மேற்கே உள்ள சிறிய சந்து வழியாகதான் வெளியே

வரமுடியும். அதன் வழியே மீண்டும் எங்கள் வீட்டின் முன் காம்பவுண்ட் கேட் வழியாக வெளியே ஓடினான். ஓடி வீட்டை விட்டு வெளியே வந்து இடது பக்கம் திரும்பி மெயின்ரோட்டை பார்த்து ஓடினார். அப்போது எனது அப்பாவின் தம்பி விஜயன் அங்கே வந்தார். நாங்கள் உள்ளே நுழைந்தபோது எனது அப்பா ரத்த வெள்ளத்தில் அங்கே கிடந்தார். அவர் அணிந்திருந்த நகைகள் இல்லை. வாய்யை சுற்றி வெள்ளை கலர் பொடி போல இருந்தது. தலை முழுக்க இரத்தக் காயங்கள் இருந்தன. கழுத்தில் கயிறால் இறுக்கியது போல இரண்டு காயங்கள் இருந்தது. அந்த இடத்தில் அப்பாவை அடித்த இரும்பு சுத்தியல் கிடந்தது. ஒரு இரும்பு பைப் கிடந்தது. ரத்தம் பட்ட ஒரு வெள்ளை வேஷ்டி, ஒரு நீல லுங்கி ஆகியவை இருந்தன. சாம்பல் நிற முழுக்கை சட்டை ஒன்றும் இருந்தது. ஒரு கையுறை இருந்தது. கொஞ்சம் மது இருந்த ஒரு மது பாட்டில் கிடந்தது. எடுத்து முகர்ந்து பார்த்தபோது விஷ வாடை அடித்தது. ஒரு டி.வி ரிமோட் இருந்தது. ஒரு சிகரெட் லைட்டர் இருந்தது. ஒரு சிகரெட் கூடு இருந்தது. எனது அப்பா தூங்கி கொண்டிருந்த கட்டிலுக்கு கீழே இருந்த டிராயர் உடைக்கப்பட்டிருந்தது. அதில் இருந்த ரூபாய் 31,700/- ஐ காணவில்லை. நான் உடனே வெளியே அப்பாவை ஆஸ்பத்திரிக்கு ஆட்டோ பிடிக்கலாம் என ஓடினேன். அப்போது சத்தம் கேட்டு மெயின் ரோட்டு பக்கத்திலிருந்து ஆட்டோ டிரைவர்கள் முடுக்கு வழியாக எங்கள் வீட்டை பார்த்து ஓடி வந்தார்கள். அருள்ஜோஸ் என்ற ஆட்டோ டிரைவரும் ஓடி வந்தார். அவரிடம் அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டி செல்ல வேண்டும் ஆட்டோ எடுத்து வாங்க என்று சொன்னேன். அவர் தன்னுடைய ஆட்டோவை எடுத்து வந்தார். நானும், சித்தப்பா விஜயனும் அப்பாவை தூக்கி

ஆட்டோவில் ஏற்றி குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம். நாங்கள் கூட்டிச் சென்று மருத்துவர் பார்த்து அப்பா இறந்துவிட்டதாக சொன்னார். ஒரு 10, 15 நிமிடம் தாண்டி அம்மா என்னுடைய ஆண்டியின் மகன் டெமியுடன் பைக்கில் வந்தார். அங்கு வந்த பிறகு அப்பா இறந்தது அம்மாவுக்கு தெரிந்தது. அப்பாவின் உடலை பிணவறைக்கு கொண்டு சென்றார்கள். அதன்பிறகு சிறிது நேரம் கழித்து எனது அம்மா சொல்ல சொல்ல உறவினர் ஒரு வர் புகாரை எழுதினார். புகார் எழுதியவுடன் வாங்கி பார்த்து படித்து விட்டு அம்மா கையொப்பம் செய்தார்கள். நான் அம்மாவுடன் தான் இருந்தேன். சிறிது நேரம் கழித்து 2.30 மணியளவில் பளுகல் காவல் நிலைய காவலர்கள் வந்தார்கள். அவர்களிடம் புகாரை கொடுத்தோம். எதிரியை பற்றி அடையாளம் சொன்னோம். 1 மணி நேரம் கழித்து நானும், அம்மாவும் வீட்டிற்கு வந்து விட்டோம். ஒரு 3.00, 3.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். அம்மா ஆஸ்பத்திரிக்கு வரும்போது வீட்டு சாவி வைத்து வீட்டை பூட்டி வந்துவிட்டார். வெளியிலேயே உட்கார்ந்திருந்தோம், அம்மா அழுது கொண்டிருந்தார். 5.30 மணியளவில் களியக்காவிளை ஆய்வாளர் காளியப்பன் மற்றும் போலீசார்கள் வந்திருந்தார்கள். வேறு அதிகாரிகளும் வந்திருந்தார்கள். போலீஸ் முன்னிலையில் அம்மா வீட்டு கதவை திறந்து கொடுத்தார். அங்கு என்ன இருக்கிறது என பார்த்தார்கள். சாட்சிக்கு அங்கிருந்த அருள்ராஜ், வில்சன் ஆகியோரை கூப்பிட்டார்கள். ஆய்வாளர் அப்பாவின் ரத்தம் பட்ட லுங்கி, அப்பாவை தலையில் அடித்த சுத்தியல், பைப்துண்டு, துணியால் ஆன கையுறை, ரத்தம்பட்ட வெள்ளை நிற வேஷ்டி, சாம்பல் நிற முழுக்கை சட்டை, விஷம் கலந்த மது பாட்டில், டிவி ரிமோட், சிகரெட் லைட்டர், சிகரெட் கூடு,

சம்பவம் நடந்த இடத்தில் தரையிலிருந்து இரத்தம்பட்ட காங்கிரீட் சிறிதையும், இரத்தம்படாத காங்கிரீட் சிறிதையும் உடைத்து எடுத்தார்கள். ஒரு ஆபிசர் மேடம் ரத்தத்தை பஞ்சில் முக்கி எடுத்தார். மேலே சொன்ன பொருள்களை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21 ஆகியவற்றை சாட்சி அடையாளம் காட்டுகிறார். அப்பாவின் உடல் அடுத்த நாள் 27.11.2023 அன்று மாலை 3.00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. மாலை 6.00 மணியளவில் பளுகல் காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்தார்கள். குற்றவாளியை பிடித்து வைத்திருக்கோம் என்று சொல்லி நகையையும், பணத்தையும் அடையாளம் காட்ட வேண்டும் என சொன்னார்கள். நானும், அம்மாவும் உடனே புறப்பட்டு போனோம். காவல் நிலையத்தில் எதிரியை பிடித்து உட்கார வைத்திருந்தார்கள். டேபிளிலில் நகைகள் மற்றும் பணத்தை வைத்திருந்தார்கள். நாங்கள் அவற்றை அடையாளம் காட்டினோம். மேலும் எதிரி அணிந்திருந்த பிங் கலர் சட்டையையும், ஜீன்ஸ் பேண்டையும், நைலான் கயிற்றையும் அடையாளம் காட்டினோம். எதிரி சா.பொ. 1, சா.பொ. 2 மற்றும் சா.பொ. 8 ஆகியவற்றை அடையாளம் காட்டுகிறார். பார்த்தவுடன் எவ்வாறு அப்பாவின் நகையை அடையாளம் காட்டினோம் என்றால் அவர் 10 வருடங்களாக அதை அணிந்திருந்தார். பார்த்தவுடன் அடையாளம் காட்ட முடிந்தது. அந்த கைப்பற்றப்பட்ட தொகை 500 ரூபாய் நோட்டுக்கள் 62, 200 ரூபாய் நோட்டுக்கள் 3, மற்றும் 100 ரூபாய் நோட்டு 1 ஆகியவை இருந்தன. அந்த நகைகளையும், பணத்தையும் தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவில்

உள்ள சா.பொ. 7 வரிசை மற்றும் சா.பொ. 3, 4, 5 மற்றும் 6 ல் உள்ளவைதான். அந்த தொகையும், நகைகளும். அப்பா ஆப்ரேசன் ஆகி வீட்டில் இருக்கும்போது ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு முறை எதிரி வந்தார். வந்து ரூபாய் 2,00,000/- கடன் கேட்டார். அப்பா உடல்நலம் சரியான உடன் வீட்டு வேலை தொடங்க இருப்பதாக கூறி தன்னிடம் வேறு பணம் இல்லை என்று சொன்னார். எனது சித்தப்பா விஜயனின் வீடு எங்கள் வீட்டிலிருந்து கிழக்கு பக்கம் ஒரு வீடு தள்ளியுள்ளது. எங்கள் வீட்டிற்கும், விஜயன் வீட்டிற்கும் இடையே எனது அப்பாவின் கடைசி தம்பி அருள்வினு வீடு உள்ளது. எல்லா பொருட்களையும் ஆய்வாளர் கைப்பற்றியவுடன் ஒரு ஆவணத்தில் எழுதினார். அதை வில்சன் மற்றும் அருள்ராஜிடம் காட்டினார். அவர்களிடம் கையொப்பம் பெற்றார். இது சம்பந்தமாக ஆய்வாளர் 26.11.2023 அன்று விசாரித்தார். அடுத்த நாள் 27.11.2023 அன்று அடையாளம் காட்ட போலீஸ் ஸ்டேசன் சென்றபோது விசாரித்தார். மீண்டும் ஒரு மாதம் கழித்து ஒரு நாள் வீட்டிற்கு வந்து விசாரித்தார்.

மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டு மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை துவங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

நான் என்ன செய்து வருகிறேன் என்றால் திருவனந்தபுரம் கம்பெனியில் சைட் இன்ஜினியராக பணிபுா ிகிறேன். போலீசார் என்னை விசாரிக்கும்போது எனது அப்பா காண்டிராக்டர் மூலம் மார்த்தாண்டம் சந்தையில் துப்புரவு தொழிலாளியாக பணிபுரிந்தார் என்று நான்

சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் சொன்னேன். பரக்குன்று ஏசுவின் திருஇருதய ஆலயம் எங்கள் வீட்டிலிருந்து சிறிது தூரம் தள்ளி சுமார் 100 அடி உயரத்தில் உள்ளது என்றால் சரியல்ல. உயரத்தில் உள்ளது, 100 அடி இருக்காது. ஆலயம் முதலில் ரோடுடன் சேர்ந்த தரைதளம், ஏசுவின் பாதத்தில் மரியாவின் சிலை வைத்து ஒரு தளமும், மூன்றாவதாக உள்ள தளத்தில்தான் ஆலயம் உள்ளது என்றால் சரியல்ல, மரியாவின் சிலை வைத்துள்ள தளம்தான் ஆலயத்தின் தளம். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது அம்மா எங்கு மருந்து வாங்குகிறார் என்றால் மூகாம்பிகை இன்ஸ்டியூட்டில் மருந்து வாங்குகிறார். நான் கோவிலுக்கு வெளியே எனது குழந்தையை வைத்து கொண்டு இருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். எனது அம்மா தலைசுற்றலாக சொன்னபோது பலவீனமாக மற்றொருவர் உதவியுடன் வரவேண்டிய நிலையில் இல்லை என்றால் சரிதான். தலைசுற்றுவதாக சொன்னார்கள், அவர்களாகவே வந்தார்கள். அதனால் எனது குழந்தையை எனது மனைவியிடம் விட்டு விட்டு வரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, என் குழந்தை உறங்கி கொண்டிருந்தது, அதனால் கொண்டு போய் விட்டு வந்தேன். எனது அப்பாவிற்கு சர்ச்சிற்கு போகும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆலயத்தில் அலங்காரங்கள் செய்யப்பட்டு ஒலிபெருக்கிகள் வெளியே வைக்கப்பட்டிருந்ததா என்றால் அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன, ஒலிபெருக்கிகள் இல்லை. சர்ச்சிற்குள் ஒலிபெருக்கிகள் இருந்தனவா என்றால் ஆமாம். சர்ச்சிற்குள் இருந்த ஒலிபெருக்கிகள் சுற்றுபுறத்தில் கேட்கும்அளவுதான்

இருந்தது என்றால் சரியல்ல, சர்ச்சிற்குள் கேட்கும், வெளியே கேட்காது. எங்கள் வீட்டிற்கு கேட்கும் அளவுதான் ஒலி இருந்தது என்றால் சரியல்ல. அன்றைய தினம் எங்கள் தெருவெல்லாம் சர்ச்சிலிருந்து ஒலிபெருக்கிகள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் போகும்போது காம்பவுண்ட் கேட் திறந்திருந்ததாக தற்போது சொன்ன விவரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னேன். வீட்டு கதவு சிறிதளவு திறந்திருந்ததாக போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி பின்வாசல் வழியாக ஓடியதாகவோ, வீட்டை சுற்றி ஓடியதாகவோ, போலீசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னேன். நான் எங்கள் வீட்டிற்குள் நுழைந்து பார்த்தவுடன் எதிரியை துரத்தி சென்றேனா, அப்பாவை பார்க்க சென்றேனா என்றால் எதிரியை துரத்தி கொண்டு பின்வாசல் வழியாக சென்றேன். அந்த விவரத்தையும் நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னேன். எதிரி ஒரு பிளாஸ்டிக் கவரில் நகைகள், பணம் மற்றும் நைலான் கயிறு ஆகியவற்றை தனது பின்னால் சொருகி கொண்டு ஓடினார் என்று தற்போது சொன்ன விவரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த சமயத்தில் அந்த கவரில் இருந்த பணம் மற்றும் நகைகள் அப்பாவுடையதுதானா என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது என்றால் பணம் தெரியாது. ஆனால் செயின் மற்றும் மோதிரங்கள் இருந்தன, அதை பார்த்தேன். அந்த நகைகள், பணத்தை பறித்து எடுப்பதற்கு நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லையா என்றால் நான் பிடிக்க போனேன் அவன் பின்புறம் ஓடிவிட்டான். எங்கள் வீடு

அமைந்திருக்கும் காம்பவுண்டிற்குள் மொத்தம் எவ்வளவு இடம் என்றால் மொத்தம் 4 ½ சென்ட் இருக்கும். அப்பாவை எத்தனை மணிக்கு மருத்துவமனை எடுத்து செல்வதுற்கு தூக்கினோம் என்றால் 10.45 மணி இருக்கும். யார் யாரெல்லாம் சேர்ந்து தூக்கினோம் என்றால் நானும், அப்பாவின் தம்பி விஜயனும் தூக்கினோம். எதுவரையில் எனது அப்பாவை தூக்கி சென்றோம் என்றால் மெயின் ரோட்டில் ஆட்டோ நின்றது அது வரையில் தூக்கி சென்றோம். அப்பாவை தூக்கி செல்லும்போது எனது உடையிலோ, சித்தப்பாவின் உடையிலோ இரத்தக்கறை பட்டதா என்றால் என் பனியன் முழுவதும் பட்டது. என் கையில் பட்டது. சித்தப்பாவிற்கும் துணியிலும், கையிலும் பட்டது. அந்த துணிகளை போலீசாரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போது கழுத்தில் காயங்கள் இருந்தததது என்றோ, வாயில் பொடி கிடந்தது என்றோ சொன்னேனா என்றால் சொன்னேன். என்னை போலீசார் விசாரிக்கும்போது எனது அப்பாவின் தலையில் காயங்கள் இருந்ததாக மட்டும்தான் சொன்னேன் என்றால் தலையில் இருந்த காயத்தையும் சொன்னேன், கழுத்தில் இருந்த காயத்தையும் சொன்னேன். வாயில் பொடி இருந்ததையும் சொன்னேன். நான் பார்க்கும்போது எதிரியின் இடுப்பிற்கு பின் தான் பணம், நகைகள், நைலான் கயிறு ஆகியவை இருந்த பிளாஸ்டிக் கவர் இருந்தது என்றால் சரிதான். நான் பார்க்கும்போது அப்பா நிமிர்ந்து படுத்திருந்தாரா அல்லது எப்படி படுத்திருந்தார் என்றால் நிமிர்ந்துதான் படுத்திருந்தார். எனது அப்பா நல்ல திடகாத்திரமான ஆரோக்கியமான நபர் என்றால் சரிதான். எனது அப்பா ஆப்ரேசனுக்கு பிறகு படுக்கையில்தான் இருப்பரா என்றால்

இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு வரை படுக்கையில்தான் கிடந்தார். அதன்பிறகு எழுந்து உட்கார ஆரம்பித்தார். என்னையும், எனது சித்தப்பாவை தவிர வேறு யாரும் எனது அப்பாவை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல உதவி செய்தாரா என்றால் இல்லை. ஆட்டோ டிரைவர் மட்டும் ஆட்டோ ஓட்டினார். நாங்கள் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 11.00, 11.10 மணிக்கு சென்றோம். உடனடியாக மருத்துவர் பார்த்தாலா என்றால் எமர்ஜென்சி வார்டுக்கு எடுத்து சென்றோம், அங்கு மருத்துவர் பார்த்தார். பார்த்தவுடனேயே இறந்துவிட்டதாக சொன்னாரா என்றால் 10 நிமிடம் கழித்து சொன்னார். எமர்ஜென்சி வார்டில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் நாங்கள் வெளியே நின்றோம். அப்பாவை உள்ளே கூட்டி சென்றார்கள். அங்கே நாங்கள் இருந்தது அரை மணி நேரம் இருக்கும். அப்பாவின் உடலை பிணவறைக்கு எத்தனை மணிக்கு கொண்டு சென்றார்கள் என்றால் சுமார் 12 மணி பக்கம் இருக்கும். எனக்கு சரியாக எத்தனை மணிக்கு கொண்டு சென்றார்கள் என்று தெரியாதா என்றால் அந்த சமயம் நான் நேரம் பார்க்கவில்லை, 12 மணிக்குள் இருக்கும். நாங்கள் ஆஸ்பத்திரிக்கு போகும்போது வீட்டில் யார் இருந்தார்கள் என்றால் அம்மா மட்டும்தான் இருந்தார்கள். நாங்கள் போனபிறகு அம்மா அங்கே இருக்கும்போது வேறு யாரும் வீட்டிற்கு வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது, நான் அங்கே இல்லை. அம்மா எதுவும் சொல்லவில்லையா என்றால் நாங்கள் போனபிறகு வீட்டை பூட்டி கொண்டு வந்ததாக சொன்னார். நாங்கள் ஆட்டோவில் எனது அப்பாவை ஏற்றி கொண்டு வருவதை அங்கே யாராவது பார்த்தார்களா என்றால் அங்கே இருந்த ஆட்டோ

டிரைவர் 1, 2 பார்த்தார்கள். வேறு சிலரும் பார்த்தார்கள். அன்றைய தினம் சர்ச்சில் பொதுமக்களுக்கு விருந்து கொடுத்தார்களா என்றால் பொதுவாக அது போன்ற நாட்களில் கொடுப்பார்கள், அன்றைய தினம் கொடுத்தார்களா என்று தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்தேன். அன்றைய தினம் சர்ச்சில் விருந்து கொடுப்பார்கள் என்ற விவரம் தெரிந்துதான் சர்ச்சிற்கு போனோம் என்றால் சரியல்ல, அப்பா வீட்டில் இருந்தார், அதனால் அவருக்கும், வீட்டில் சாப்பாடு செய்திருந்தோம். நான் சொல்வது தவறு என்றாலும் சர்ச் மூலமாக சபையில் உள்ள அனைவருக்கும் சர்ச் மூலம் சாப்பாடு தருவார்கள் என்றாலும் அதுதான் அந்த ஊர் வழக்கம் என்றாலும் சரிதான். ஆனால் சாப்பிடுபவர்களும் இருப்பார்கள். சாப்பிடாமல் போகிறவர்களும் இருப்பார்கள். ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டிற்கு வந்ததாக சொல்லும் நேரத்தில் போலீசார்கள் அங்கு இருந்தார்களா என்றால் இல்லை. வீட்டில் பொதுமக்கள் கூடி இருந்தார்களா என்றால் கூடி இருந்தார்கள். ஒரு ஆயிரம் பேர் இருந்திருப்பார்களா என்றால் இல்லை, 50 லிருந்து 100 பேர் இருந்திருப்பார்கள். ஊர் பொதுமக்களுக்கு சம்பவம் குறித்து நானும், எனது அம்மாவும் வரும்வரையில் எதுவும் தெரியாதா என்றால் தெரிந்திருக்கலாம். அப்பாவை மருத்துவமனைக்கு எடுத்து சென்றதை பார்த்ததை மற்றவர்கள் சொல்லியிருக்கலாம். அசம்பாவிதம் நடந்ததாக அங்கு பரப்பரப்பு காணப்படவில்லை என்றால் சரியல்ல, பரபரப்பாகதான் இருந்தது. நாங்கள் மருத்துவமனையில் வந்ததிலிருந்து 5.30 மணிக்கு போலீசார் வரும்வரையில் வீட்டை பூட்டி வைத்துக்கொண்டு வெளியேதான் உட்கார்ந்திருந்தோம் என்ற விவரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார்

நாங்கள் வரும்வரையில் வீட்டை திறக்ககூடாது என்று எதுவும் சொன்னார்களா என்றால் இல்லை. தற்போது நான் நீதிமன்றத்தில் நான் அடையாளம் காட்டிய பொருட்களை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றினார்கள் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரிக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் 26 ஆம் தேதி எத்தனை மணி வரையில் அங்கு இருந்தார்கள் என்றால் 5.30 மணிக்கு வந்து விட்டு சுமார் 6.30 மணி வரையில் இருந்தார்கள். நான் தற்போது அடையாளம் காட்டிய பொருட்கள் அனைத்துமே வீட்டில் இருந்து எடுத்ததா என்றால் ஆமாம். கட்டம் போட்ட வேஷ்டி மட்டும் அப்பா உடுத்தியிருந்தது. அதை போஸ்ட்மார்டம் செய்தபோது போலீசார் எடுத்திருக்கலாம். நான் சம்பவ தினம் அன்று நான் ஊரிலேயே இல்லை என்றாலும் நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் விசாரணையிலும் சொல்லாமல், இந்த வழக்கை வலுப்படுத்துவதற்காக பல இல்லாத சங்கதிகளை தற்போது நீதிமன்றத்தின் முன் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, பார்த்ததையும், நடந்ததையும் சொன்னேன். என் அம்மாவிற்கு நீரழிவு நோய் இருந்ததாகவும், அதனால் அவர் சர்ச்சிலிருந்து வெளியே வந்ததாகவும், அப்போது நான் இருந்ததாகவும், நாங்கள் வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது சம்பவம் நடந்து கொண்டிருந்ததாகவும் சொல்வது இந்த வழக்கில் எங்கள் இருவரையும் கண்ணுற்ற சாட்சிகளாக சேர்க்கப்படுவதற்காக போலீசாரால் உருவாக்கப்பட்ட கதை என்றால் சரியல்ல. புகாரில் ஒரு விதமாகவும், போலீசார் விசாரிக்கும்போது ஒரு விதமாகவும், நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது வேறு விதமாகவும் வழக்கை

வலுபடுத்துவதற்காக மாறி மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிலிருந்து கூட்டமாவிளை எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். பரக்குன்று ஜங்சன் முடிந்தபிறகு தொடங்குவது கூட்டமாவிளை என்றால் ஆமாம், வடக்கு பக்கம் உள்ளது கூட்டமாவிளை. சந்தேகத்தின் அடிப்படையில் மரணமடைந்து கிடந்த அப்பாவிற்கு வழக்கிற்காக சாட்சியமாக கண்ணுற்ற சாட்சிகளாக எங்களை சேர்ப்பதற்காக பொய்யாக வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காலில் ஏற்பட்ட நோயின் காரணமாக மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார் என்றும், அதை தெரியாமல் அவசர கோலத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதை நிலை நிறுவத்துவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.